மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

அ.வ.எண். 123/2022

வா.சா.1

பெயர் : பார்வதி அம்மாள் தேதி :29.07.2024
வயது : த/பெ :
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

1873 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10 வது பிரிவின் படி 2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

நான் இந்த வழக்கின் 1 ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1 ம் சாட்சியாக இன்று சாட்சியம் அளிக்கிறேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து உள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். வழக்கின் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன்.

கீழ்கண்ட ஆவணங்கள் எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 14.03.2021 ம் தேதிய கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக கணினி வழி பதிவிறக்க நகல் 322/2001 – **வா.சா.ஆ.1**

2. 04.02.2009 ம் தேதிய கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக கணினி வழி பதிவிறக்க நகல் 265/2009 – **வா.சா.ஆ.2**

3. 01.11.2012 ம் தேதிய கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக கணினி வழி பதிவிறக்க நகல் 4842/2012 – **வா.சா.ஆ.3**

4. 29.10.2012 ம் தேதிய கிராம நிர்வாக அலுவலகர் வல்லநாடு கஸ்பா கிராம சான்றிதழ் அசல் – **வா.சா.ஆ.4**

5. 28.12.2021 ம் தேதிய பட்டா எண். 1055 சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ.5**

6. 09.11.2013 ம் தேதிய வாதி பெயருக்கு பட்டா மாறுதல் தொடர்பான உத்தரவு அசல் – **வா.சா.ஆ.6 ( வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆனது சர்வே எண். 751/35 க்குரியது என்றும், 1,2 பிரதிவாதிகளின் குடும்பத்திற்குரிய பாதாள கரண்டி அம்மன் பீடம் உள்ளதால் வா.சா.ஆ.1 மூலம் கிரையம் வாங்கவில்லை**

**என்றும் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் செய்த ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

7. 03.03.2022 ம் தேதிய முறப்பநாடு காவல் நிலைய மனு ரசீது அசல்– **வா.சா.ஆ.7**

8. 04.05.2022 ம் தேதிய வில்லங்க சான்றிதழ் கணினி வழிப்பதிவிறக்க நகல் – **வா.சா.ஆ.8**

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல்விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது )

ஒப்பம்/–

சா. முத்துலெட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவைகுண்டம்.